1971 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. என். வி.நடராசன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி நிதிநிலைமை சீரான உடனே, எந்த அளவிற்கு விரைவாகச் செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்ய முயற்சி மேற்கொள்ளப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Dharmapuri district has been declared as a very economically backward district and it needs the sympathy of the Government. So, will the Government give first preference to it in the matter of establishing a Printing Press?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தையும் நினைவில் கொண்டு, தருமபுரியில் அரசு அச்சகம் அமைக்கும் பிரச்சினை அக்கறையுடன் கவனிக்கப்படும். அதற்கு எந்த இடம் அளிக்க வேண்டுமோ, அந்த உரிய இடம் அளிக்கப்படும்.

திரு. சொ. காவேரிமணியம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தில் அரசு அச்சகம் தொடங்கப்படும் என்று கூறினார்கள். அது மதுரையில் துவக்கப் படுமா? அல்லது மதுரைக்குப் பக்கத்தில் அதையொட்டி ஏதாவது ஒரு கிராமத்தில் துவக்கப்படுமா? அதற்கான மூலதனம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அறிவிக்க முடியும்.

Water for Harijan Colonies in Tiruttani taluk

* 76 Q.—THIRU E. S. THYAGARAJAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to provide pipe water supply to Harijan Colonies in Tiruttani taluk; and

(b) if so, the places where they are proposed?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

அரூர் வட்டம் அரிசன விடுதிகள்

* 77 வினா.—டாக்டர் ச. அ. சின்னராசு: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அரூர் வட்டத்திலுள்ள அரிசன மாணவ, மாணவியர் விடுதிகளுக்குப் புதியதாகக் கட்டடங்கள் கட்டவும், வசதிகள் பெருக்கவும் அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?